THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Tuesday, the 8th September 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, the Deputy Chairman (THIRU G. KRISHNAMOORTHY) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

Government Board High Schools

*71. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the number of Government (Board) High Schools in the Ramanathapuram Educational District for which sanction has been accorded by the Government for construction of new buildings ; and

(*b*) the stage at which the matter stands in respect of the various schools ?

அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் கல்வி மாவட்டத்தில் எத்தனை அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளுக்கு புதுக்கட்டிடங்கள் கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது ?

(இ) பல்வேறு பள்ளிகளில், இப்பணி எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இருபத்திஆறு.

(இ) சட்ட மன்றத்தின் முன்பு ஒரு விவர அறிக்கை(*) வைக்கப் பட்டுள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : ராமனுதபுரம் மாவட்டத்தில் கடுக்காவலசு என்ற ஊரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் இந்த மாதிரிக் கட்டிடம் கட்டுவதற்குப் பணம் அரசாங்கம் ஒதுக்கியதாகத் தகவல் தெரிகிறது. அதைப்பற்றி ஒரு குறிப்பும் இல்லை. அந்தப் பள்ளியும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுமா ?

(*)Printed as Appendix I.

[8th September 1970

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. வி. தங்கபாண்டியன் : ராமனுதபுரம் மாவட்டத்தில் கழக உயர்நிலைப் பள்ளிகளுக்காக ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள பல கட்டிடங்கள் இன்னும் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. அதுபற்றி மாவட்டத் தலைமைப் பொறியாளர்களிடமிருந்து மராமத்து செய்வதற்கான குறிப்பு, விண்ணப்பம் ஏதும் அரசிற்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப்பற்றித்தான் இங்கே குறிப்பு இருக்கிறது. இதுபற்றி விவரம் அறிய தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : இந்த மாதிரி பல மாவட்டங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்றபடி ஓரளவுக்குப் பணம் ஒதுக்கப்பட்டு ''அட் ஹாக் கிராண்ட்'' என்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த மாவட்டக் கல்வி அதிகாரிகள் எந்தெந்தப் பள்ளிகள் அப்படிப் கட்டப்பட வேண்டுமென்று கணக்கிட்டு அந்த வகையில் வேலைத் திட்டத்தை அமைப்பார்கள். எல்லா மாவட்டங்களுக்கும் இது உண்டு.

Madurai Erskine Hospital

*72. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the last grade servants in Madurai Erskine Hospital went on strike in the third week of October, 1969 ;

(*b*) if so, the reasons therefor ;

(*c*) whether they have complained that the doctor is responsible for the death of one of their colleagues ; and

(*d*) if so, the action taken thereon ?

மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் 1969 அக்டோபர் மாதம் மூன்ருவது வாரத்தில் கடைநிலை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

(உ) தங்களின் சக ஊழியர் சாவிற்கு ஆஸ்பத்திரியில் பணியாற்றிய டாக்டர் பொறுப்பு என்று அரசாங்கத்திற்கு புகார் செய்துள்ளார்களா ?

(எ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?